பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 06 2024 6 30

சனிக்கிழமை மாலை

தலைப்புச் செய்திகள் -

- தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை காப்பதில் மாநில அரசு வெற்றிகரமாக செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழிக்க வகை செய்யும் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்திருத்த மசோதா இன்று சட்டப்பேரவையில் நிறைவேறியது.
- பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
- தேசிய தேர்வுகள் முகமையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.
- உலக கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியா - தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை காப்பதில் மாநில அரசு வெற்றிகரமாக செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறைகள் தொடர்பான மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்திற்கு முதலமைச்சர் பதிலளித்து பேசினார்.

18 ஆண்டுகளாக நின்று போயிருந்த சிவகங்கை கண்டதேவி அருள்மிகு சொர்ண மூர்த்தீஸ்வரர் கோவில் தேரோட்டம் எந்த பிரச்சினையுமின்றி காவல்துறை உதவியுடன் சுமூகமாக நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா, மதுரை சித்திரைத் திருவிழா, திருச்செந்தூர் சூரசம்ஹாரம், பழனி தைப்பூச திருவிழா, குலசேகரப்பட்டினம் தசரா, வேளாங்கண்ணி தேவாலய திருவிழா, நாகூர் சந்தனக்கூடு திருவிழா போன்ற அதிக மக்கள் கூடும் விழாக்கள் அனைத்தும் அமைதியாக நடத்தி முடிக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

போதைப்பொருள் நடமாட்டம் மற்றும் விற்பனையை முற்றிலுமாக தடுக்கவும், கள்ளச்சாராயத்தை ஒழிக்கவும் காவல்துறை மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

மது போதைப் பழக்கங்களுக்கு எதிராக விழிப்புணர்வு பிரச்சாரங்களும் அதிகம் முன்னெடுக்கப்பட வேண்டுமென அரசு கருதுவதாக திரு மு க ஸ்டாலின் குறிப்பிட்டார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) -46---- செகண்ட்*

கள்ளக்குறிச்சி சம்பவத்துக்கான உண்மையான காரணத்தை அறியவும், குற்றவாளிகளை கைது செய்யவும் தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

உயிரிழந்தோர் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும், பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்வி மற்றும் வாழ்க்கை பொறுப்பை அரசே ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவ காப்பீடு திட்டத்தின் பயன்களை அவர்களின் பெற்றோர்களும் பெறும் வகையில் இந்த திட்டம் மறுசீரமைக்கப்படும் என்றும், நடைமுறை சிக்கல்களை களைந்திட தலைமைச் செயலாளர் தலைமையில் விரைவில் ஆய்வுக் கூட்டம் நடத்தி தேவைப்படும் நெறிமுறைகள் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு தற்காப்பு உடைகள் மற்றும் சிறிய உபகரணங்கள், மீட்பு உடைகள் நாலரை கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

காவலர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் திரு மு க ஸ்டாலின் பட்டியலிட்டார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழிக்க வகை செய்யும் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்திருத்த மசோதா இன்று சட்டப்பேரவையில் நிறைவேறியது.

இதற்கான மசோதாவை இன்று பேரவையில் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தாக்கல் செய்தார்.

கள்ளக்சாராயம் காய்ச்சுவது, விற்பனை செய்வது உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுவோருக்கு ஆயுள் தண்டனையும், பத்து லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்றும், அவர்களின் அசையா சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் அந்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இன்று சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது வெளியான சில தகவல்கள் -

வடசென்னை வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு தொள்ளாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

உசிலம்பட்டி தொகுதி 58 கிராம கால்வாய் திட்டத்தின் கீழ் ஆணையூர் கண்மாய்க்கு புதிய மடை அமைக்க சுமார் மூன்று கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும் என மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஒப்பந்தப்புள்ளி விரைவில் கோரப்படும் என்றும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

சென்னையில் புதிய தாழ்தள பேருந்து சேவை அடுத்த மாதம் தொடங்கப்படும் என மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

கிராமப்புறங்களில் மினி பேருந்துகள் வழித்தடங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் இன்று பேரவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் கூறினார்.

**[]<<<>>>[]**

முசிறி கைலாசநாதர் கோவிலுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் குடமுழுக்கு நடத்தப்படும் என அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த 20-ஆம் தேதி தொடங்கிய இந்த கூட்டத்தொடர் காலை மற்றும் மாலையிலும் நடைபெற்றது.

இந்த கூட்டத்தொடரில் துறை வாரியான மானியக் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வாயிலாக வேளாண்மைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட 85 தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் 48

வேளாண்மை அலுவலர்களுக்கான பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னையில் வழங்கினார்.

இந்த புதிய நியமனங்கள் மூலம் அரசு நலத்திட்டங்கள் விவசாயிகளுக்கு விரைந்து சென்றடைவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக இன்று வெளியான மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாக திரு நரேந்திர மோடி பொறுப்பேற்ற பின்னர், ஆற்றும் முதலாவது உரை இது என்பதால், பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**[]<<<>>>[]**

தேசிய தேர்வுகள் முகமையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலம் பஞ்சகுலாவில் நடைபெற்ற பிஜேபி மாநில செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், கேள்வித் தாள்கள் வெளியாவதை தடுக்க கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்படும் என்று தெரிவித்தார்.

கேள்வித்தாள் முன்கூட்டியே வெளியானது தெரியவந்தால் உடனடியாக அந்த வழக்கு சிபிஐ-யிடம் ஒப்படைக்கப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

ஹரியானா மாநிலத்தில் பிஜேபி மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கும் என்றும் திரு தர்மேந்திரபிரதான் நம்பிக்கை தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு ஆளுநர் சார்பாக நடப்பு ஆண்டுக்கான ஆளுநர் விருதுகளுக்கு விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைகள் வரவேற்கப்படுவதாக ஆளுநர் மாளிகையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சமூக சேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய இரண்டு பிரிவுகளில் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் தன்னலமற்ற சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்களையும், பரிந்துரைகளையும் ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் தேதிக்குள் சென்னை ஆளுநர் மாளிகையில் உள்ள ஆளுநரின் துணைச்செயலாளருக்கு அனுப்ப வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே உள்ள தனியார் பட்டாசு தொழிற்சாலையில் இன்று காலை நேரிட்ட வெடிவிபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ள முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், தலா மூன்று லட்சம் ரூபாய் நிதியுதவியையும் அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நெல்லை மாவட்டம் பாபநாசம் அணைப்பகுதியில் பெய்து வரும் மழை காரணமாக அந்த அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியது.

**[]<<<>>>[]**

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடப்பு ஆண்டின் காலாண்டிற்கான மாவட்ட அளவிலான வன்கொடுமை மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் ஆட்சியர் திரு பி என் ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

நாமக்கல்லில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணி இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தூத்துக்குடியில் ராணுவத்தில் சேருவதற்கான அக்னி வீரர்கள் தேர்வு அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடங்கி ஐந்தாம் தேதி வரை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

வடமாநிலங்களிலிருந்து ரயிலில் போதைப்பொருட்கள் கடத்தி வரப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து கோவை ரயில் நிலையத்தில் காவல்துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள மருத்துவ முகாம் மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ராதாகிருஷ்ணன் இன்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

உலக கோப்பை டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இன்று இந்தியா - தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

**Bridgetown-**ல் இப்போட்டி, இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும், இப்போட்டியின் இரண்டாவது நாளான இன்று ஆட்ட நேர இறுதியில் தென்னாப்பிரிக்கா தனது முதல் இன்னிங்ஸில் நான்கு விக்கெட் இழப்புக்கு 236 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக இந்தியா தனது முதல் இன்னிங்ஸை ஆறு விக்கெட் இழப்புக்கு 603 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

[]<<<>>>[]

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் அவர் சீனாவின் **Zhenxiong dong** 7-5, 6-2 என்ற செட் கணக்கில் வென்றார்.

[]<<<>>>[]

உலக டேபுள் டென்னிஸ் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Yashaswini ghorpade – Diya parag chitale** இணை இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

துனிஷியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் இந்த இணை - தென்கொரியாவின் **Seongjin kim – Siwoo yoo** இணையை 12-14, 11-2, 11-8, 11-6 என்ற செட் கணக்கில் வென்றது.

***End of News***